தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

திருவள்ளுவர் ஆண்டு 2053, ஆனி/ஆடி
ஜூலை 2022 - செய்தி மடல் 26

பொறுப்பாசிரியர்:
குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)

Websites : https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Google Groups : Mintamil Google Group

Facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar
மின்தமிழ்–minTamil

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.
(அதிகாரம்:விருந்தோம்பல் குறள்: 86)

அனைவருக்கும் வணக்கம்.

அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஜூலை மாதம் முழுவதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன. அவை பற்றிய சுருக்கமான செய்திகளை உங்களோடு திணை இதழ் வழியாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

வரலாறு ஒவ்வொரு நிமிடமும் படைக்கப்படுகின்றது. நேற்றைய செய்தி தான் இன்றைய வரலாறு. இதனை மையக் கருப்பொருளாகக் கொண்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் மின்னாக்கப் பணிகளில் சிறப்பு பெறும் சஞ்சிகைகளை முன்னிலைப்படுத்தி முனைவர் தேமொழி அவர்கள் வழங்கிய உரை ஜூலை மாதத்தில் நிகழ்ந்தது.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

திணை

Bulletin of Tamil Heritage Foundation international - THFi

உலகின் வேறு பகுதிகளிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து வந்த சமயங்களில் முக்கியமான ஒரு சமயமாகக் கருதப்படுவது கத்தோலிக்க கிறிஸ்துவம். கத்தோலிக்க கிறிஸ்துவ மதம் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அது தோன்றிய நிலத்தில் எப்படி சாதி பாகுபாடு இல்லையோ, அதே போன்ற கருத்தாக்கத்தைக் கொண்டுதான் தமிழ் நிலத்திலும் மக்களை இப்புதிய மதத்தில் ஏற்கும் செயல்பாடுகளை முன்னிறுத்தியது. ஆயினும் கூட சாதிக்கொள்கையில் ஊறித் திளைத்திருக்கும் தமிழ் நிலத்தில் கத்தோலிக்க கிறிஸ்துவம் வளர்ச்சி பெற இந்தப் புதிய மதமும் சாதிக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அதன் முதன்மை நோக்கத்தில் தவறிய செய்தியை ஆவணமாக்கியது `தமிழக கத்தோலிக்க திருச்சபை அன்றும் இன்றும்` என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட ஓர் ஆய்வுரை.

தொல்காப்பிய பொருளதிகாரம், சங்க இலக்கியங்கள் ஆகியவை நிலை நிறுத்தும் பெண்கள் நிலையை பற்றியும் ஒரு உரை இதே ஜூலை மாதத்தில் நிகழ்ந்தது.

தமிழக தொல்லியல் களப்பணிகளில் ஆண்களே கோலோச்சிய சூழல் டாக்டர் மார்க்சிய காந்தி என்ற ஒரு பெண்மணியின் ஈடுபாட்டினால் மாற்றத்தை கண்டது. அவரைத் தொடர்ந்து மேலும் பல தொல்லியல் அறிஞர்கள் தொல்லியல் ஆய்வுகளில் ஈடுபடவும், தமிழக வரலாற்றை வெளிக்கொணரவும், குறிப்பாக கல்வெட்டு ஆய்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது. இந்த முதல் பெண்மணியின் அனுபவ உரையும் இதே ஜூலை மாதத்தில் நமது நிகழ்ச்சிகளில் இடம்பெற்று சிறப்பு சேர்த்தது.

ஆகஸ்ட் 2ஆம் தேதி பிறந்த தமிழ் அறிஞர் தனிநாயகம் அடிகள் பற்றிய சிந்தனையை முன் வைக்கும் வகையில் தனிநாயகம் அடிகள் வாழ்க்கை வரலாறு விளக்கம் என்ற வகையில் பேராயர் அமுதன் அடிகள் அவர்கள் வழங்கிய சிறப்புரையும் ஜூலை மாதத்தின் இறுதியில் நிகழ்ந்தது.

கட்டுரைகள், புத்தக விமர்சனங்கள், விளக்கக் குறிப்புகள் என பல்வேறு வரலாற்று ஆய்வுத் தகவல்களை உள்ளடக்கி, தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுக் காலாண்டிதழான மின்தமிழ் மேடை முப்பதாவது இதழ் இதே ஜூலை மாதம் வெளியீடு கண்டது.

ஒவ்வொரு மாதமும் நிகழும் அனைத்து செய்திகளையும் அறிந்து கொள்ள திணை மாத இதழை வாசிப்பீர்.

தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இணைந்து தமிழ்ப்பணியாற்ற தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

அன்புடன்

முனைவர் க. சுபாஷிணி

(தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு)

தமிழ் மரபு அறக்கட்டளையின்

2022 ஜூலை மாத நிகழ்வுகள்

திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சிகள்

தேதி	நேரம்	கிழமை	உரையாளர்	உரை தலைப்பு
03/07/2022	11:00 AM	ஞாயிறு	முனைவர் தேமொழி	நேற்றைய செய்தி.. இன்றைய வரலாறு ! https://youtu.be/2UVUc4_bZPk
16/07/2022	7:00 PM	சனி	அருட்தந்தை ஆ. அமல்ராஜ்	தமிழக கத்தோலிக்கத் திருச்சபை அன்றும் இன்றும் – ஒரு சமூகவியல் பார்வை https://youtu.be/z4GlS-l47o0
17/07/2022	8:00 PM	ஞாயிறு	முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ்	தொல்காப்பியம் பொருளதிகாரமும் சங்கஇலக்கியங்களும் காட்டும் பெண்களின் சமூகநிலை https://youtu.be/VtcqCKgatAA
24/07/2022	11:00 AM	ஞாயிறு	முனைவர் நா. மார்க்சிய காந்தி	ஐம்பது ஆண்டு தொல்லியல் அனுபவங்கள் https://youtu.be/EVR21qMUxso
30/07/2022	11:00 PM	சனி	அருட்தந்தை. அமுதன் அடிகள்	தனிநாயகம் அடிகள் – பிறந்த நாள் சிறப்புரை https://youtu.be/Xk7dRM4KE8Q

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

திணை

Bulletin of Tamil Heritage Foundation international - THFi

தமிழ் மரபு அறக்கட்டளையின்

2022 ஜூலை மாத முக்கிய பகிர்வுகள்

தமிழ்மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு வெளியிடும் காலாண்டு மின்னிதழ் "மின்தமிழ்மேடை". தமிழ் மரபு அறக்கட்டளையின் பல்வேறு தொடர் நடவடிக்கைகளில் இணையும் ஓர் அங்கமாக நமது "மின்தமிழ்மேடை" காலாண்டு மின்னிதழ் வெளியீடு அமைகின்றது.

கட்டுரைகள், புத்தக விமர்சனங்கள், விளக்கக் குறிப்புகள் என பல்வேறு வரலாற்று ஆய்வுத் தகவல்களை உள்ளடக்கி, **"தமிழ் மரபின் வரலாற்று ஆய்வை மேம்படுத்துவோம்"** என்ற கருப்பொருளை தாங்கி தமிழ் மரபு அறக்கட்டளையின் மின்தமிழ் மேடை முப்பதாவது இதழ் இதே ஜூலை மாதம் வெளியீடு கண்டது.

பொறுப்பாசிரியர்: முனைவர் தேமொழி

மின்தமிழ்மேடை – காட்சி: 30 [ஜூலை — 2022] இணையம் வழி படிக்க:

கூகுள் புக்ஸ் தளத்தில் – http://books.google.com/books?id=P7R9EAAAQBAJ

தமிழ்மரபு அறக்கட்டளை தளத்தில் – https://academy.tamilheritage.org/wp-content/uploads/2022/07/30.pdf

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

திணை

Bulletin of Tamil Heritage Foundation international - THFi

திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சி

நேற்றைய செய்தி.. இன்றைய வரலாறு !

முனைவர் தேமொழி

எழுத்தாளர்
செயலாளர், தமிழ்மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
சான் பிரான்சிஸ்கோ, கலிபோர்னியா, அமெரிக்கா

திசைக் கூடல் நிகழ்வு #292

ஜூலை – 3, 2022 – ஞாயிறு - காலை 11:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/2UVUc4_bZPk**

தமிழக கத்தோலிக்கத் திருச்சபை அன்றும் இன்றும் – ஒரு சமூகவியல் பார்வை

அருட்தந்தை ஆ. அமல்ராஜ்

ஆவணக் காப்பக இயக்குனர்
மரியின் ஊழியர் சபை, ரோம், இத்தாலி

திசைக் கூடல் நிகழ்வு #293

ஜூலை – 16, 2022 – சனி – மாலை 07:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/z4GlS-l47o0**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

தொல்காப்பியம் பொருளதிகாரமும் சங்கஇலக்கியங்களும் காட்டும் பெண்களின் சமூகநிலை

முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ்
அண்ணாமலைக் கனடா
(அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் கல்வித்திட்டம்)
டொராண்டோ, கனடா

திசைக் கூடல் நிகழ்வு #294

ஜூலை – 17, 2022 – ஞாயிறு – இரவு 8:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/VtcqCKgatAA**

ஐம்பது ஆண்டு தொல்லியல் அனுபவங்கள்

முனைவர் நா. மார்க்சிய காந்தி
இந்தியாவின் முதல் தொழில்முறை பெண் கல்வெட்டுஆய்வாளர்
துணை மேற்பார்வை தொல்லியல் ஆய்வாளர் (பணி நிறைவு)
தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை

திசைக் கூடல் நிகழ்வு #295

ஜூலை – 24, 2022 – ஞாயிறு – காலை 11:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/EVR21qMUxso**

தனிநாயகம் அடிகள் – பிறந்த நாள் சிறப்புரை

அருட்தந்தை. அமுதன் அடிகள்
இயக்குனர் தனிநாயகம் அடிகள் தமிழியல் நிறுவனம்
திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு

திசைக் கூடல் நிகழ்வு #296

ஜூலை – 30, 2022 – சனி – காலை 11:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/Xk7dRM4KE8Q**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

திணை

Bulletin of Tamil Heritage Foundation international - THFi

தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.

தமிழால் இணைவோம்!

தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

"கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

நல்ல சிந்தனை:

உருவும், இளமையும், ஒண் பொருளும், உட்கும்,
ஒரு வழி நில்லாமை கண்டும், ஒரு வழி
ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பு இட்டு
நின்று வீழ்ம் தக்கது உடைத்து.

- நாலடியார்

பொருள்: தோற்றமும் இளமை நிலையும் மேன்மை வாய்ந்த செல்வமும் நன்மதிப்பும் எல்லாரிடமும் ஒரே நிலையிலேயே இருப்பதில்லை. ஆகவே ஏதாவது ஒரு வழியில் ஒரு நல்வினையையேனும் செய்யாதவனது உயிர் வாழ்க்கை, உடம்பு தோன்றி சிலகாலம் பயனில்லாமல் இருந்து பின் இறந்துபோகும் வீண் நிலையினை உடையதாகும்.